பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

19 03 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜனநாயகத்தின் அன்னையாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. அஸ்ஸாம் சட்டப்பேரவை தேர்தலுக்கான முதலாவது வேட்பாளர் பட்டியலையும், கேரள சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாவது வேட்பாளர் பட்டியலையும் பிஜேபி வெளியிட்டுள்ளது.

4. பாகிஸ்தானில் கனமழை காரணமாக 19 பேர் உயிரிழந்தனர்.

5. இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Om Semwal மற்றும் Tanvi Khanna இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

ஜனநாயகத்தின் அன்னையாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தெலுங்கு வருடப் பிறப்பான உகாதி உள்ளிட்ட பல்வேறு பண்டிகைகள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அனைத்து துறைகளிலும் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில் இந்தியா பயணித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த பண்டிகைகள் அனைவருக்கும் வளத்தை வழங்க வேண்டும் என்று வாழ்த்துவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய பாதுகாப்பு தொழில் மாநாட்டினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்யும் சிறு குறு தொழில் நிறுவனங்கள், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு குறு தொழில்துறை முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு சூழ்நிலையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக உள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் சர்வதேச தரத்திலான 100 தொழில்பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, தொழில் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இந்த நடவடிக்கை உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், சிறிய அளவிலான நீர்மின் திட்டங்களுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் வடகிழக்கு மாநிலங்கள் பெருமளவு பயனடையும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பருத்தியை குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்வதற்காக இந்திய பருத்திக் கழகத்திற்கு ஆயிரத்து 718 கோடி ரூபாயை விடுவிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விவசாயிகள் நலனில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதை இது எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும், அமைச்சரவையின் முடிவு, பருத்தி சந்தையில் ஏற்படும் விலை ஏற்றத் தாழ்வுகளிலிருந்து, விவசாயிகளை பாதுகாக்க உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில், பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதை இந்த நடவடிக்கை உறுதி செய்யும் என்று கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

செல்வமகள் சேமிப்பு திட்டத்தின் கீழ் 3 கோடியே 83 லட்சம் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக அஞ்சல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாடுமுழுவதும் 47 கோடிக்கும் மேற்பட்ட அஞ்சல் வங்கி சேவை வாடிக்கையாளர்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அஞ்சல் துறை சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதார் மையங்கள் மூலம், 14 கோடிக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் துறை சார்பிலான பாஸ்போர்ட் சேவை மையங்கள் மூலம், 2 கோடிக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறியுள்ளன.

சமையல் எரிவாயு போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும், பொதுமக்கள் இதுகுறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் பாரத் கேஸ் நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

சமையல் எரிவாயு பற்றாக்குறை என்று பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேவையின்றி முன்பதிவு செய்வதை தவிர்க்க வேண்டும் என்றும் அந்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை அனைத்து அரசியல் கட்சிகளும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள தமிழகம், கேரளம், மேற்குவங்கம், அஸ்ஸாம் மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தேர்தலை நேர்மையாகவும், நியாயமாகவும் நடத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தேர்தல் பணியில் ஈடுபடுடவுள்ள பணியாளர்களுக்கான பயிலரங்கு இன்று நடைபெறுகிறது.

காணொலி வாயிலாக நடைபெறவுள்ள இந்த பயிலரங்கில், தேர்தல் அலுவலர்கள் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேர்தலின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பயிற்சி அளிக்கும் வகையில் இந்த பயிலரங்கு நடைபெறுவதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<<

கேரள சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 39 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி, காசர்கோடு தொகுதியில் திருமதி. அஷ்வினியும், பரவூர் தொகுதியில் திருமதி. Vathsala Prasanna Kumar-ம், ஆலப்புழா தொகுதியில் திரு. M.J. Job-ம், கொல்லம் தொகுதியில் டாக்டர் பிரதாப் குமாரும் போட்டியிடுகின்றனர்.

இதற்கிடையே, Dharmadom சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும், கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தலசேரி துணை பதிவாளர் அலுவலகத்தில் அவர் தமது வேட்புமனுவை தாக்கல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அஸ்ஸாம் சட்டப்பேரவை தேர்தலுக்கான முதலாவது வேட்பாளரை பட்டியலையும் பிஜேபி வெளியிட்டுள்ளது

88 பேர் கொண்ட இந்த பட்டியலின்படி, முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா, Jalukpari தொகுதியில் போட்டியிடுகிறார்.

>>>>>><<<<<<

கோவாவில் உள்ள Ponda சட்டப்பேரவை இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி சாபர்பில் திரு. Geetesh போட்டியிடுவார் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இந்த தொகுதியில் பிஜேபி வேட்பாளராக திரு. Ritish Ravi Naik போட்டியிடுவார் என்று அக்கட்சி கூறியுள்ளது.

இதேபோல். நாகாலாந்தின் Koridang தொகுதியில் திரு. Daochier Imchen-ம், கர்நாடகாவின் Bagalkot-ல் திரு. Veerabhadrayya Charantimath-ம், தெற்கு Davanagere தொகுதியில் திரு. ஸ்ரீநிவாஸ் தாசகரியப்பாவும், திரிபுராவின் தர்மாநகர் தொகுதியில் திரு. Jahar Chakraborti-யும் போட்டியிடுவதாக பிஜேபி அறிவித்துள்ளது.

இந்த தொகுதிகளில் இடைத்தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் சர்வதேச இணைய முறைகேடுகளில் ஈடுபட்டது தொடர்பாக 7 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து, ஏராளமான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

சீனாவிற்கான இந்திய தூதராக திரு. விக்ரம் துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது, இங்கிலாந்துக்கான இந்திய தூதராக பணியாற்றி வரும் இவர் இப்பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் கனமழை காரணமாக, 19 பேர் உயிரிழந்தனர்.

கராச்சியில் நேற்றிரவு பெய்த கனமழையால் சுவர் இடிந்து விழுந்தது, மின்சாரம் தாக்கியது போன்ற சம்பவங்களால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாகிஸ்தான் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Om Semwal மற்றும் Tanvi Khanna இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Om Semwal 11-6, 11-9, 8-11, 10-12, 19-17 என்ற செட்கணக்கில் மெக்ஸிக்கோவின் Sebastian Salazar -ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Tanvi Khanna, 15-13, 12-10, 7-11, 11-4 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் Maya Weishar-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Pramod Bhagat - Manisha Ramadass இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-11, 22-20 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Colin Kerouanton - Laureen Marchand இணையை வென்றது.

>>>>>><<<<<<